உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவம்.

மலர் 4. | காலயுத்திஸு ஆவணிமீ -1918ஸு ஆகஸ்டுமீ | இதழ் 8

திருக்குறுந்தொகை.

தன்னிற்றன்னை யறியுந் தலைமகன்—தன்னிற்றன்னை யறியிற்றலைப்படும்
தன்னிற்றன்னை யறிவிலனாயிடின்—தன்னிற்றன்னையுஞ் சார்தற்கரியனே.

என்னையேது மறிந்திலனெம்பிரான்—தன்னை நானுமுனே துமறிந்திலேன்
என்னைத் தன்னடியானென் றறிதலும்—தன்னை நானும்பிரானென் றறிந்தே
னே.

சிவஞான போதம்.

ஆறுஞ் சூத்திரம்.

உணருரு வசத்தெனி னுணரா தின்மையி
னிருதிற னல்லது சிவசத் தாமென
விரண்டு வகையி னிசைக்குமன் னுலகே.

(இ-ள்.) *உணருருவெனின் = ("தம்முணர்வின்றம்" யாகிய முதற்பொருள்) அளவைகளால் அறியப்படும் இயல்பையுடையது எனில்— அசத்து = (அவ்வாறு அறியப்படும் பிரபஞ்சம்போல் அழிபொருளாகிய) அசத்தாம்.— உணராது எனின் = எதனாலும் அறியப்படாதது எனின்—இன்மையின் = சூனியப்பொருளாமாத லால்—இருதிறனல்லது = இவ்விருபகுதியுமன்றி — இரண்டுவகை யின் சிவசத்தாமென = (ஒருவாற்றால் அறியப்படாமையும் ஒருவாற் றால் அறியப்படுதலுமாகிய) இரண்டுவகையாலும் சிவசத்தாமென— இசைக்கும் மன் உலகே = கூறுவர் மெய்யுணர்வினிலைபெற்றுயர்ந் தோர். (எ-று.)*

மேலைச் சூத்திரத்தில் ஐம்பொறிகள் ஆன்மாவினால் விடயங் களை யறிந்தும் அவ்வாறறியும் தம்மையும் ஆன்மாவையும் அறிய

மாட்டாதவாறுபோல், முதல்வனால் ஆன்மா அறிந்தும் அவ்வாறறியும் தன்னையும் முதல்வனையும் அவ்வான்மா அறியமாட்டாது என்று கூறியதனால், முதல்வன் எதனாலும் அறியப்படாத பொருளோ என்னும் ஐயம் நிகழாதவாறு இச்சூத்திரத்தாற் சத்தையும் அசத்தையும் வரையறுத்து முதல்வனின் சிறப்பியல்பிலக்கணத்தைக் கூறுகின்றார்.

முதல்வனிலக்கணம் பொதுவியல்பு எனவும் சிறப்பியல்பு எனவும் இருவகைப்படும். பொதுவியல்பு முதல்வன் பிரபஞ்சத்தோடு பேதமாயும் அபேதமாயும் பேதாபேதமாயும் கலந்துநிற்றல். இது இரண்டாஞ்சூத்திரத்தில் விளக்கப்பட்டது. சிறப்பியல்பு தன்வயத்தனாதல் முதலிய சிற்குணங்கள் எட்டையும் உடையவனாயிருத்தல். இவை யெட்டும் சத்து சித்து என்னும் இரண்டனுள் அடங்குதலால், பதி பசு பாசம் என்னும் மூன்றனுள் பதியாகிய முதல்வனே சத்தும் சித்துமாயிருக்கும் பொருள் என்பது இச்சூத்திரத்தால் உணர்த்தப்படுகின்றது.

"தம்முணர்வின் தமியாகிய முதற்பொருள்" என்னும் எழுவாய் ஐந்தாஞ் சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது. உணருரு அசத்தெனின் என்பதனை உணருருவெனின் அசத்து என மாறுக. எனின் என்பதனை உணராது என்பதனோடுங் கூட்டுக. இன்மையின் என்பதில் இன் என்பது ஆகலான் என்னும் பொருளைத் தரும். "இருதிறன்" "இரண்டுவகையின்" என்பவற்றில் தொக்கியிருக்கும் முற்றும்மைகளை விரித்துப்பொருளுரைக்க. "அல்லது" என்பது அன்றி என்னும் பொருளைத்தரும் வினையெச்சக்குறிப்புமுற்று. இருதிறனுமன்றி ஆம் எனக்கூட்டுக. ஒருவாற்றானு மறியப்படாமையாவது பசுஞான பாசஞானங்களா லறியப்படாமை. ஒருவாற்றால் அறியப்படுதலாவது சிவஞானம் ஒன்றானே யறியப்படுதல். இரண்டுவகையிற் சிவசத்தாம் எனக்கொண்டு கூட்டுக.

பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறியப்படுவது சடப்பொருளே யாதலால் அவ்விரண்டினாலும் அறியப்படாத பொருள் சிவமாதலும், பதிஞானத்தால் அறியப்படும் பொருள் பாசஞான பசுஞானங்களால் அறியப்படும்பொருள்போல் அநித்தமாகாமையால் சத்தாதலும் பெறப்படுமெனக் கூறவேண்டி "இரண்டுவகையினும் சிவசத்தாமென இசைக்கும்" என்றருளிச்செய்தனர்.

சிவசத்து என்பது சித்தாகிய சத்து அஃதாவது, சச்சிதானந்தப் பொருள் என்பதை யுணர்த்தும்.

சைவ சித்தாந்தத்தின்படி பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களும் அநாதிநித்தப் பொருள்களாயிருக்க சிவம் ஒன்றே சத்துப் பொருள் என்று ஏன் கூறவேண்டுமெனில், பாசமானது சடப்பொருளாயிருத்தலினாலும், தனு கரண புவன போகங்களாகக் காரியப்பட்டு விகாரங்கள் மறுவுதலானும், முத்தியிலும் ஆன்மபோத நீக்கத்திலும் தன்வலிகெட்டு நிற்றலானும், சர்வசங்காரகாலத்திற் சிவசத்தியில் ஒடுக்கமுறலானும் அது முதல்வனைப் போல் மெய்ப்பொருளாகாமல் கனவும் கானற்சலமும் போன்ற பொய்ப்பொருளாமென்ப. * ஆன்மா சார்ந்ததன் வண்ணமாயிருந்து கொண்டு கேவலாவத்தையில் ஆணவம் வேறு தான்வேறு என்னாதபடி அவ்வாணவமலமேயாயிருத்தலானும், சகலாவத்தையில் பிறப்பிறப்புகளால் விகாரமெய்துதலானும், சுத்தாவத்தையில் ஆன்மபோதம் நசித்துச் சிவமேயாய் விடுதலானும், சர்வசங்காரகாலத்தில் சர்வான்மாக்களும் சிவத்திலொடுங்கச் சிவம் ஒன்றே சேட்டித்திருத்தலானும், ஆன்மாவும் மெய்ப்பொருள் என்று சொல்லப்படாமல் சிவமொன்றே மெய்ப்பொருள் என்று நாட்டப்படும். இதனைத் திருக்குறளில் "மெய்யுணர்தல்" என்னும் அதிகாரத்தில் மெய் என்பது முதல்வனை யுணர்த்தி நிற்றலாலும் அறிக. இவ்வுண்மைகளை விளக்கிச் சடமாகிய சத்தினின்றும் முதல்வனை வேறு பிரித்தற்கு "சிவசத்து" என்றருளினர்.

பதி பசு பாசம் என்னும் மூன்றனுள் பசுவும் பாசமும் பசுஞான பாசஞானங்களால் அறியப்படுதலினால் அவை அசத்துப் பொருள்கள் என்றும், பதிப்பொருள் சிவஞானம் ஒன்றினாலேயே அறியப்படுதலால் அதுவொன்றே சிவசத்தாம் என்றும் கூறில், சிவனைக்காணாதவர் தம்மையும் காணார் பாசத்தையுங்காணார் என்று நூல்கள் கூறுவதனால், ஏனைப் பசு பாசங்களும் சிவஞானத்தாலறியப்படும் என்பது பெறப்படும். படவே, அவையும் சிவசத்தாம் எனச் சொல்லவேண்டிவருமே யெனில், அவை சிறப்புவகையால் சிவஞானத்தால் அறியப்படுமாயினும் பொதுவகையால் ஏனை ஞானங்கட்கும் விடயமாதலால் அவை உணருருவாகிய அசத்துப் பொருள்கள் என்னப்பட்டனவென்க. ஒருவன் இதனை யான் அறிந்தேன், அறிகின்றிலேன் என்னுங்கால், இதுவென்னும் சுட்டுணர்விற்குவிடயம் புறத்தே தோன்றும் குடமும், யான் என்னும் உணர்விற்கு விடயம் அந்தக்கரணங்களை யதிட்டிக்கும் ஆன்மாவும்,

---

* ஆன்மாவானது கேவலாவத்தையில் மலத்தில் மறைப்புண்டு, தன்சத்தி மடங்கி சூனியம்போற் கிடத்தலால் அசத்தாதற்கும், சுத்தாவத்தையில் ஆணவமலமறைப்பு நீங்கியவழி தனது சத்தி விளங்கப்பெற்று தனக்குரிய என்றும் ஒரு தன்மைத்தாய சிவானந்தத்தை யனுபவித்தலால் சத்தாதற்கும் பொதுவாய் நிற்றலினால் சதசத்து எனப்படும்.

அறிந்தேன் என்னும் உணர்விற்கு விடயம் அவ்வான்மபோதமும், அறிகின்றிலேன் என்னும் உணர்விற்கு விடயம் அறியாமையுமேயா யிருத்தலாலும், உடம்பை மயக்கத்தால் யான் எனமதிப்பினும் இதனையான் அறிந்தேன் என்றபோது யான் எனும் உணர்விற்கு விடயம் ஆன்மாவேயா யிருப்பதனாலும் பசு பாசங்கள் பசுஞான பாசஞானங்களினாலும் அறியப்படுதல் பெறப்பட்டது. ஆனால் பதிஞான முணரா தாரும் சிவனுண்டு எனவும் சிவனில்லை யெனவும் வழங்கிவருவதனால் சிவப்பொருளும் பொதுவகையால் பாசஞான பசுஞானங்களுக்கு விடயமாம் போலும் எனின், ஆகாது. குடம் உண்டு குடம் இல்லையென்றபோது குடமானது புத்தி விருத்தியிற் பரிணமித்துத் தோன்றி ஆன்மாவின்கண்வந்து அநுபவமாகின்றது. சிவப்பொருள் அவ்வாறு அநுபவத்தால் உணரவருகிறதில்லை. அநுபவஞானத்திற்கு விடயமாவதே ஈண்டு உணருரு என்னப்படுவதனால் அவ்வாறு விடயமாகாத சிவப்பொருள் உணருருவல்லவென்க.

இவ்விடத்தில் அசத்து எனப்படுவது நீர்மேலெழுத்துப் போல்நிலைபெறுதல்போலக் காணப்பட்டு சடுதியில் மறைந்துபோம் காரியப்பிரபஞ்சத்தை யென்பதறிக.

பாசஞானமாவது— பாசமாகிய கருவிகளால் ஆன்மாவினிடத்தில் நிகழும் ஞானம். பசுஞானமாவது—தற்போதமுனைப்பால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம். பதிஞானமாவது—பதியின் அருளால் ஆன்மாவினிடத்து நிகழும் ஞானம்.

இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்:—

1-வது—உணருரு வசத்தெனி னுணராதின்மையின்.

2-வது—இருதிறனல்லது சிவசத்தாமென விரண்டுவகையி னிசைக்குமன்னுலகே.

இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

1-வது—உயிரறிவினாலே யறியப்பட்டவெல்லா மழியும்.

2-வது—அப்பிரமேயமாக வறியப்பட்டவனே யரன்.

இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

1-வது—ஈண்டு அறிவினாலறியப்பட்ட சுட்டு அசத்தென்றது-- அவைதாம் பிரகாசமாய் நின்றே யப்பிரகாசமாய் நிற்றலான்.

2-வது—இனிப்பிரகாசத்தினுக்குப் பிரகாசிக்கவேண்டுவதின்மையாலும் அப்பிரகாசத்தினுக்குப் பிரகாசமின்மையானும்— இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவம் என்றுணர்தற்பாற்று.

இதின் உதாரண வெண்பாக்கள் ௬.

கடவுளின் சொரூப தடத்த இலக்கணங்கள்.

(168 - பக்கத் தொடர்ச்சி.)

சிவபெருமானுக்குச் சொரூபம் அல்லது தடத்த நிலையொன்றே யமையாதோ, இருநிலைகளும் வேண்டப்படுமோ எனில், அவருக்குச் சொரூபநிலை இல்லையெனில் சர்வஞ்ஞத்வம், பேரின்ப முடைமை, மலமின்மை, நித்தியத்துவம் முதலிய சிற்குணங்கள் கூற இடமிராமல் அவர் செய்யும் தொழில் முதலியவற்றால் சீவராசிகளுள் ஒன்றாய் விடுவர். அவருக்குத் தடத்தநிலை யில்லையெனில் அவர் சிருட்டி முதலிய தொழில்களைச் செய்கின்றார் என்று கூற இடமிராது.

சிவஞானசித்தியார்.

படைப்பாதி தொழிலும் பத்தர்க் கருளும்பாவனையு நூலு
மிடப்பாக மாதரா ரோடியைந் துயிர்க்கின்ப மென்று
மடைப்பானு மதுவு முத்தியளித்திடு மியோகும் பாசந்
துடைப்பானுந் தொழிலுமேனி தொடக்கானேற் சொல்லொணாதே.

ஆதலால் வேதாகமங்கள் அவருக்குச் சொரூபம் தடத்தம் என்னும் இருவகையான இலக்கணங்களையும் ஒருங்கே யெடுத்துக் கூறும். வேதத்தின்முடிபாகிய வேதாந்தம் எனப்படும் உபநிஷத்துகள் அவருடைய சொரூப இலக்கணத்தையே யதிகமாக வெடுத்துப்போற்றும். சிவாகமங்கள் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களை வகுத்து, சொரூபம் தடத்தம் என்னும் இரண்டிலக்கணங்களையும் அதிகாரமுறையாக எடுத்துக்கூறும். இவ்வுண்மை யுணர்ந்த பெரியோர்கள் வேதாந்தத்தெளிவே சைவ சித்தாந்தம் என்று கொண்டாடுவர். இவ்வுண்மை யுணராதார் சிலர் சிவபெருமானுக்குச் சொரூப இலக்கணத்தோடு தடத்த விலக்கணமும் கூறுதல் நிர்விகாரியாயுள்ள பரம்பொருளை விகாரியெனவும் ஒன்றோடொன்று மாறுபடக் கூறுவதாகும் என்று மயங்குவர். சூரியன் வாளாவிருக்கவும் அதின் கிரணங்களின் வெம்மையினால் பூமியில் புற்பூண்டுகள் முளைப்பதும் வளர்வதும் வாடுவதுமா யிருப்பதுபோல், சிவபெருமான் தமது அருட்சத்தியின் சந்நிதிமாத்திரத்திலேயே உலகம் சிருட்டிமுதலிய தொழில்களாற் காரியப்பட, தாம் அதனாற் சிறிதும் தாக்கற்று நிற்பர். ஆதலால் சொரூப விலக்கணத்தோடு தடத்த விலக்கணமுமுடைமையால் சிவபெருமான் விகாரியாகவில்லை.

தாயுமானசுவாமிகள் பாடல்.

ஆக்கியளித்துத் துடைக்கும், தொழில்,
அத்தனை வைத்துமெள்ளத் தனையேனும்,
தாக்கறநிற்குஞ் சமர்த்தன்.

சிலர் வேதாந்த நூல்கள் பிரமப்பொருள் நிர்க்குணமாயிருக்கும் பரவஸ்துவாமெனக் கூறுதலால் அதற்கு பேரின்பமுடைமை, பேரருளுடைமை முதலிய எண்குணங்களுண்டு என்பதும் பொருந்தாதென்பர். அது அறிவீனர் கூற்றுமென மறுக்க. உயிர்க்குணங்களாகிய சத்துவம் இராஜசம் தாமசம் என்னும் முக்குணங்கள் சிவபெருமானுக் கில்லாமையால் வேதாகமங்கள் அவரை நிர்க்குணன் என்றும் குணாதீதன் என்றும் துதிக்கின்றனவே யல்லாமல் சச்சிதானந்தம் முதலிய சிற்குணங்களில்லாமையாலன்று. சச்சிதானந்தம் முதலிய சிற்குணங்களும் பிரமப்பொருளுக் கில்லையாயின் அது வெறும்பாழ் எனப்படும் சூனியப் பொருளாய் முடிந்து, அதனால் உயிர்களுக்கு எக்காலத்தும் யாதொரு பயனுமின்றாய்விடும். சிவபெருமானுர்க்கு இறைமைக் குணங்களாகிய சிற்குணங்கள் எட்டும் உள்ளன வென்பதை "எட்டுக்கொலா மவரீறில் பெருங்குணம்" "எட்டுவான் குணத்தீசன்" என்னும் தமிழ் வேதத்தாலும் "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்—றாளை வணங்காத் தலை" என்னுந் திருக்குறளாலும் அறிக. அவ்வெண்குணங்களாவன—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவி லாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை என்பனவாம். இக்குணங்களெட்டும் சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்றினுள் அடங்கி நிற்றலால் சிவபெருமானைச் சச்சிதானந்தப் பொருள்என்று வேதாகமங்கள் கூறும்.

சிவபெருமானுடைய சொரூபநிலையை ஒருவித்துக்கும் தடத்தநிலையை அவ்வித்தினின்றும் முளைத்தமரத்திற்கும் ஒப்பாகச் சொல்லலாம். மரத்திற் காணப்படும் தளிர் இலை கிளை பூ காய் கனி நிறம் மணம் உருசி முதலியனவெல்லாம் வித்திலிருந்தே விளைவனவாயினும், அவை வித்திலடங்கியிருக்கும்போது அதிசூக்குமமாய் நம்மால் அனுபவிக்கக்கூடாதனவாயிருக்கின்றன. அது மரமான பிறகே அதனிடத்துள்ள எல்லா நலங்களையும் நாம் அனுபவிக்கக் கூடியவர்களாயிருக்கிறோம். அஃதேபோல், குணம் குறி ஊர் பேர்

செயல் முதலியன ஒன்றும் வெளிப்படுதலின்றி, எவற்றிற்கும் பிறப்பிடமாய் வெறும் சச்சிதானந்த மயமாயிருக்கும் சொரூப நிலையை மாத்திரம் உடைய பதிப்பொருளை உயிர்களடைந்து அநுபவிக்கமாட்டா. அத்தனிப்பரம்பொருள் சிவம் சத்தியாதியாகிய தடத்தத் திருமேனிகளைத் தாங்கி வெளிப்பட்டருளுவதனாற்றான் உயிர்களுக்குப் பயன்படுவதாயிற்று.

திருக்களிற்றுப்படியார்.

ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்
தருள்வடிவுந் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறி வார் பேசு.

திருவாசகம்.

நானுமென்சிந்தைநு நாயகனுக் கெவ்விடத்தோந்
தானுந்தன்றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந்திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்துசேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

ஒருவித்தையானது முளைக்கத்தொடங்கும்போது இரண்டிலைகளாகவே முளைக்கின்றனது. அதின் பிறகே அதினின்றும் கிளைகள் முதலாயின தோன்றுகின்றன. அப்படியே சொரூபநிலையையுடைய பதிப்பொருள் தடத்தநிலையையடைந்த அவசரத்தில் முதலில் சிவமும் சத்தியுமாகிய திருமேனிகொண்டருளிற்று. அதினின்றே சதாசிவாதி திருமேனிகள் வெளிப்பட்டருளின.

பதிப்பொருள் சிவமும் சத்தியுமாக மாத்திரம் இருந்து சிருட்டிமுதலிய தொழில்களைச் செய்யலாகாதோ, சதாசிவ மகேசுராதி மூர்த்தங்களாகவும் இருப்பதேன் எனில், ஆன்மாக்களின் பலவகைப்பட்ட பக்குவங்களுக்கேற்ப அவைகளும் வேண்டற்பாலனவேயாமென்க. இறைவனாது அருளாட்சிக்குட்பட்ட உலகங்கள் எண்ணிறந்தனவாம். அவைகளுட் பல இந்நிலவுலகத்தைப்போல் தூலமாயிருக்கும். பல சூக்குமமாயிருக்கும். பல அதிசூக்குமமாயிருக்கும். அப்புவனங்களுக்கேற்ப அவைகளில் வசிக்கும் ஆன்மாக்களும் பலவகைப்பட்ட பேதங்களை யுடையனவாயிருக்கும். அவைகளின் சரீரங்களும் தூலமாகவும் சூக்குமமாகவும் அதி

சூக்குமமாகவும் இருக்கும். ஆதலால் அவ்வான்மாக்களின் பொருட்டுச் சிருட்டி முதலிய தொழில்களைச் செய்யவேண்டி அவ்வப் புவனங்களுக்கேற்றவாறு இறைவரும் அளவிறந்த அருட்டிருமேனிகளைக் கொண்டருளுவர். ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என மூவகைப்பட்டிருக்கிறார்கள். இவைகளுக்குச் சரீர முதலியனவாக்க் காரியப்படும் மாயையும் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை என மூவகையாயிருக்கும். ஆதலால் இவர்கள் பொருட்டு இறைவனாரும் அருவம் உருவம் அருவுருவம் என்னும் மூவகைவடிவங்களையுங்கொண்டு, சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் மகேசுரன் உருத்திரன் மால் அயன் என்னும் ஒன்பது பேதமாகவும், இவற்றினின்றும் விரிந்த எண்ணிறந்த மூர்த்தங்களாகவுமிருந்து அவ்வப்புவனங்களின் படைப்பு முதலிய ஐந்தொழில்களைச் செய்தருளுவர். இவ்வொன்பது பேதங்களுள் சிவம் சத்தி நாதம் விந்து என்னும் நான்கும் அவருடைய அருவத் திருமேனிகளும், சதாசிவம் அருவுருவத் திருமேனியும், மகேசுரன், உருத்திரன், மால் அயன் என்னும் நான்கும் உருவத்திருமேனிகளுமாம்.

சிவஞானசித்தியார்.

சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன் றிகழுமீச
னுவந்தரு ளுருத்திரன்றன் மாலய னென்றிவென்றாய்
பவந்தரு மருவநாலிங் குருவநாலுபய மொன்றா
நவந்தரு பேதமேக நாதனே நடிப்பனென்பர்.

இவற்றுள் சதாசிவமாகிய அருவுருவத் திருமேனியே நம்மால் சிவலிங்க ரூபமாக வழிபடப்படுவது. சந்திரசேகரர், உமாமகேசர், சபாபதி, சோமாஸ்கந்தர், முதலிய வடிவங்களெல்லாம் உருவத்திருமேனிகொண்ட மகேசுர வடிவங்களாம். சிவம் சத்தி நாதம் விந்து என்பன அருவத் திருமேனிகளாகையால் அவை விஞ்ஞானகலர் முதலியவர்களாலும், சிவஞானிகளாலுமே வழிபடற்குரியனவாம்.

இறைவனாருடைய தடத்த நிலையில் வெளிவந்தருளும் சிவமும் சத்தியுமாகிய அருட்டிருவடிவமே நம்மனோரால் வழிபடற்கரியதாயின், அவருடைய சொரூப நிலையை நாம் எங்ஙனம் வழிபடற்குருகராவோம். இவ்வுண்மைகளைச் சித்தாந்த ஞான நூல்கள் வாயிலாக உணரப்பெறாதவர்கள் பலர் தங்களை நேரே பரப்பிரமப் பொருளை வழிபடும் அறிவாளிகளென்று மதித்து மனப்பால் குடித்து, சிவாராதனையைக் கைவிட்டுக்கெடுவர்.

(ப - ர்.)

சங்கராசாரியர் சரித்திரவாராய்ச்சி.

[இஃது தேவிகோட்டை ஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணக்கருளொருவராகிய, காரைக்குடி ஸ்ரீமான் ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரவர்களால் இயற்றப்பெற்று, தேவிகோட்டை ஸ்ரீமான் மெ. அரு. நா. ராமநாதச் செட்டியாரவர்களால் அச்சிடப்பட்ட சோமசுந்தரமாலை, வேதவனேசஸ்தவம் என்னும் நூல்களின் முகவுரை.]

சோமசுந்தரமாலை யென்னும் இந்நூல், "மூளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" என்னுந் தெய்வச்சுருதியைச் சிரமேற்கொண்டு "பொன்னெடுமேரு வெள்ளிப்பொருப்பு மந்தரங் கேதாரம், வன்னெடும் புரிசை சூழ்ந்த வாரணவாசியாதிப், பன்னருந் தலங்கடம்மிற் பராபரவிலிங்கந்தோன்று, முன்னரிக்கடம்பின்மாடே மூளைத்ததிச் சைவலிங்கம்" என்று பரஞ்சோதி முனிவரால் விளக்கப்பெற்றபடி, திருக்கயிலாசாதி எத்தலங்களுக்கு முந்தினதாய், அத்தலங்கள்போல் விராட்புருடனுடைய அவயவங்களுள்ளே யடங்காமல் அதீதமாகிச் சர்வலோகப் பிரசித்த சிவராஜதானியாய் விளங்குகின்ற துவாதசாந்த ஸ்தலமாகிய மதுராபுரியிலே, அனவரத சாந்நித்தியராய் சதுஸ்ஷஷ்டி லீலானுக்கிரகராய் வீற்றிருந்தருளுகின்ற ஸ்ரீ சோமசுந்தரப் பெருமான்றிருவடி சமர்ப்பண ஸ்துதி ரூபமாக ஒவ்வொரு செய்யுளினும் ஆதிசங்கராசாரியராற் செய்யப்பெற்ற சிவானந்தலகரி நூறுசுலோகங்களின் வாக்கியார்த்த தாற்பரியங்களை வரிசையாக அமைத்து அச்சங்கரர் சரித்திரங்களையுஞ் சுருக்கிக்காட்டிச் செய்யப்பெற்றது.

சங்கரர் சரிதஞ்சொன்னோர், அவரிடத்துவைத்த அன்புமேலீட்டினால் அவர்க்கு மகிமைகூறு யாசைவயத்தராகிய சீடர்கள் பலர். இவர்கள் கூறுஞ் சங்கர சரித்திரமுந் தம்முள் ஒத்தனவாகாமற் பலபேதங்களாயிருக்கின்றன. இதனால் இச்சரித்திரர்கள் முதனூலொன்றிருந்து அதை நோக்கிக் கூறினாரல்லர். சங்கரருக்கு மகிமை கூறுமாசை வயத்தராய் நிற்றலாற் பூர்வாபர விரோதாதிகளைநோக்காமல் மனம்போனவாறெல்லா மெழுதிவைத்தா ரென்பதினிது விளங்கும். இது நிற்க.

சங்கரர் ஊழ்வலியினாற் பாலியகாலத்திலேயே கல்வியிற் சிறந்தவராய் ஏகான்மவாதக்கோண் மேற்கொண்டு, அதற்கிணங்கவே அனேக நூல்களுஞ்செய்து பற்பல இடங்களுஞ்சென்று வாதாடி அக்கேவலாத்துவிதமே விளக்கி வந்தாராயினும், பின்பு ஸ்ரீ நீல

கண்ட சிவாசாரியரை யடுத்து, மற்றெம் மதங்களையுந் தன் கீழ்ச் சோபானமாகக்கொண்டு அதீதமாய் வேதாந்தசாரமாய் விளங்குவது சுத்தாத்துவித சித்தாந்த சைவமே யென்னுமுண்மை யுணர்ந்து சிவதீக்ஷாதி பெற்றுச் சிவாகம விதிப்படி சந்திரமௌளீச பூசனை யிடையறுது செய்துவந்த சைவராதலால், நம்மவர்களாகிய சைவர்களால் நமது சைவப் பெரியோர்களி லொருவராக மேற்கொள்ளப் பெற்றவரென்பதே எமது கருத்து. சங்கரர் * பின்னின்ற சைவநிலையும் அநுட்டானமும் நோக்குவார்க்கு, அவர்முன்கொண்ட ‡நிலையை அறவே விட்டொழிந்தா ரென்பதினிது விளங்கும். மேலும் அவர் பின் செய்த நூல்களாலுந் துணியப்பெறும். அவர் முன் வேறு நூல் வழிகளிற் சென்று காலம் வீணே கழிந்தனவே யென்று வருந்திய குறிப்பைச் சிவானந்த லகரி (7) வது சுலோக முதலியவற்றாலும், சிவதீக்ஷையை விரும்பிக் கேட்டுக்கொண்டதை (29) வது சுலோகத்தாலும், சிவாகம விதிப்படியே பூசித்தாரென்பதைச் சிவ புஜங்கத்தில் (2. 3.) வது சுலோகங்களாலும், இன்னுமவர் முன் பயின்ற கேவலாத்துவிதிகளை முழுதும் ஒழித்துச் சைவத் தலைவர்களாகிய உண்மை நாயன்மார்களையே துதித்ததையும், முன்பு நானே பிரமமெனக்கொண்டு கூறியவாதனை முழுது நீங்கி, நான் சமலபசுவாகிய அடிமையென்றும், பரமசிவனொருவனே விமலபதியாகிய ஆண்டானென்றும், அப்பதி வழிபாடே முத்திசாதனமென்றும் உள்ளபடி துணிந்து வழிபடுதலையும், அந்நூல்களிற் பற்பல சுலோகங்களிலும் விளங்கக்காணலாம். இனிச் சங்கர சரிதர்கள் அவர் பின்னின்ற சைவநெறிச் செயல்கள் சிறிதுங் காட்டாமலும், முன்கொண்ட நெறிச்செயலும் பூர்வாபர விரோதமாகவும் பொருந்தாதனவாகவுங் கூறினராதலால், அச்சரித்திரங்களிற் சிலவற்றை எடுத்துக்காட்டி உண்மை விளக்குதற் கெழுந்த பக்க வசனங்கள் நோக்கி நமக்குச் சங்கரரிடத்துப் பிரியமின்றெனக் கொள்ளா ருண்மை கடைப்பிடிக்கு முத்தமரென்க. உண்மை நோக்காது விரோதபுத்தியே மேற்கொண்டுணர்வார்க்கு மேலுஞ் சமாதானஞ் சொல்லப்புகுவ தனுவசிய மென்க. சொல்லினும் பயனின்றென்க.

---

* பின்னின்ற சைவநிலை யென்பது ஆன்மாக்கள் முத்திநிலையில் சிவத்துக்கு பின்னிற்றலைக் குறிக்கும். ‡ முன்கொண்ட நிலையென்பது மாக்கள் பெத்தநிலையில் நாமே பிரமமென முற்பட்டு நிற்றலைக் குறிக்கும்.

இச்சங்கர சரிதம் பலவற்றுள்ளே, சங்கரவிஜய விலாசம் சங்கரவிஜயகாவியம் முதலியவற்றினுள்ள கதைகளைத் தழுவிச் சுருக்கமாகப், பெங்களூர்ச் சுப்பிரமணிய சாஸ்திரிக ளுதவிகொண்டு தொழூவூர் உப்யகலாநிதி வேலாயுதமுதலியாரால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டதென்று முகவுரை யெழுதப்பட்டிருக்கிற சரித்திரத்திலே இச்சங்கரசரிதம், கந்தபுராணம் சிவரகசியகண்டம் சிவபுராணாதிகளில், வியாசர் முதலியோரால் கூறப்பட்டதென்பதாரம்பம். நன்று நன்று; "கண்டனமின்றியாங் கலியின்வண்ணமே" இச்சங்கரரே, அவ்வியாசரனுக்கிரகம்பெற விரும்பி அவரைத்தேடிக் காணமல் வருந்தினதாகவுங் கூறுகின்றார். வியாசரைத் தேடிக்காணப்பெறாது வருந்தின சங்கரருக்கா அவ்வியாசரே கந்தபுராணாதிகளிலே சரித்திரங் கூறினார். இது பொருத்தமாகாதே என்பதை முழுதுமறந்து ஆசைவசப்பட்டுக் கூறிய சரிதர் கூற்றினுண்மையுணர்வார் உத்தமவிவேகிகளென்க. பரமேதிகாசமாகிய சிவரகசிய மென்பதை மறந்து கந்தபுராணம் சிவரகசிய கண்டமென்று கூறினதென்னில், அச்சிவரகசியத்திற் பரமசிவன் உமாதேவியார்க்கு இனிமேற் கலியில் நமதுபேரால் ஒருவன் வந்து துவிதத்தை அத்துவிதமாக நிறுத்துவானென்பனவாதி சில வாக்கியங்களன்றி வேறில்லையென்றும், அதுவுமிச் சங்கரரைக் கூறியதன்றென்றும் முன்னமே சித்தாந்த ரத்நாகர நூலாசிரியர் கூறியுள்ளார். சில புராதன சிவரகசியப் பிரதிகளில் இவ்வசனமுமில்லை. இதனுண்மை உற்றுநோக்குங்கால் அக்கொள்கையாரே அவ்வசனங்களைப் பின்பு சேர்த்துவைத்ததாக ஊகித்தற்கிடனாகின்றது. இவ்விதக்கலப்புகள் வேறு சில நூல்களினுமுள்ளன. இதனை, வான்மீகி (2400) என்று கூறிய ராமாயணம் இப்போது அவ்வெண்ணைக் கடந்து வழங்குதலுஞ் சான்றாகும். சிவன் (நமதுபேரால் ஒருவன்வந்து) என்றது கொண்டு, அவ்வொருவனென்ற சொல்லுக்கு நீலகண்ட சிவாசாரியரென்று ஏன் பொருள்கொள்ளப்படாது. நீலகண்டநாமஞ் சிவநாமமன்றோ? அவர்செய்தது அத்துவித பாஷியமன்றோ? இதனைச் சங்கரரென்றே கோடலெங்ஙனமியையும். ஆசைவயத்தராய்க் கொண்டாலும், எத்தனையோ விஸ்தார அத்தியாயவகைகளாகக்கூறி இவையெல்லாம் கந்தபுராணாதிகளினுள்ளனவென்றதெப்படி நிலைபெறும். இதுபோலும் பூர்வாபர விரோதங்கள் பொருந்தாமைக ளனேகமுள்ளன. அவற்றை விரிப்பிற் பெருகும். சிற்சில பின்வருவன காண்க.

முதலாவது அத்தியாயத்தில், உலகத்திலே சன்மார்க்கங் குறுகுதல்கண்டு தேவரனைவரும் திருக்கயிலைசென்று விண்ணப்பிக்கச், சிவபிரான், விநாயக சுப்பிரமணிய வீரபத்திர நந்தியாதியரையும், பிரம விஷ்ணுவாதி சகல தேவரையும், இச்சங்கரருக்குத் தொண்டு செய்யவே மனிதர்களாகப் பிறக்கும்படி ஆஞ்ஞாபித்தாரென்றும்; மூன்றாவது அத்தியாயத்தில் அவர்கள் அப்படியே பிறந்து அவருக்குத் தொண்டுசெய்து வந்தார்களென்றும் உள்ளம் நடுங்காதுரைத்துப், பின் ஒவ்வொரு சமயங்களிற் சங்கரர் தமக்கு வந்த ஆபத்துக்கள் நீங்கும்பொருட்டு அத்தேவர்களிற் பலரை வணங்கி வரம்பெற்றாரென்றும் பற்பல இடங்களிற் கூறுகின்றார். இரண்டாவது அத்தியாயத்திற் சிவகலையே கருவுற்றுக் கிடந்து சங்கரராய்ப் பிறந்ததாகக்கூறி, அதன்மேற் பரமேசுரன், சர்வசுதந்திரனாய்ச் சச்சிதானந்த சொரூபனாய் எங்குநிறைந்தவனாய் முக்காலத்தும் ஒரே தன்மையுடையவனாதலால், அவனுக்குப் பிறவிக்கருமமேது? கருவிற் கிடத்தலேது? பிறப்பேது? பரமேசுரன் பிறந்ததேயில்லை. தன்னிச்சை விளையாட்டால் மாயையே சங்கரராய்ப் பிறந்ததன்றி வேறில்லை யென்றுங் கூறுகின்றனர். பின் அதையு மடியோடு மறந்து சரித்திர முடிவுவரை வருமிடந்தோறும் சிவனே சங்கரராய்ப் பிறந்ததாகவும் விளக்குகிறார். இஃதென்ன மயக்கமோ?

இனிச் சங்கரர், பாலியத்திலே ஆசிரியரைத் தேடிச்சென்று வணங்கி அஞ்சலித்தெதிர் நின்றபோது, ஆசிரியர் நீயாரென்று கேட்கச், சச்சிதானந்த வடிவாகிய நான் சிவோகம் என்று கூறினதாக ஐந்தாவது அத்தியாயத்திற் கூறுகின்றார். சிவோகமென்பதே சிவம் நான் என்னும் பொருடருவதறியாது, நான் என்று ஒருசொல் மிகைபடக் கூறினர். வடிவாகிய நான் என்றது வழுவென்பதும் நோக்கிலர். சங்கரரிப்படி வழுவுறக் கூறாரென்பது புத்திமான்களறிவார்கள். ஆகவே சங்கரர், தமது வழக்கப்படி அகம் பிரமமென்று கூறினதாகக் கோடலே யுண்மையாகும். சங்கரர் தமது குறைகூறி உபதேசம் பெற விரும்பி வணங்கிநின்ற சமயத்தும் அகம் பிரமமென்னு மெழுச்சியே முன்னிற்குமேல் மற்றிடங்களிற் கூறுவானேன்.

(இன்னும் வரும்.)

ஆதிசைவ குலமான்மியம்.

[தேவிகோட்டை ஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணக்கருளொருவராகிய காரைக்குடி ஸ்ரீமான் ராம. சொ. சொக்கலிங்கஞ் செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது.]

சைவமென்னுஞ்சொல்லுக்குச் சிவசம்பந்தம் என்பதுபொருள். அரிபிரமேந்திராதி தேவரனைவர்க்கும் இறைவனாகச் சிவனொருவனே மேன்மையுற்று, வேதசிவாகம புராணேதிகாசாதி சமஸ்த சாஸ்திரங்களாலும் விளக்கப்பெற்று நிற்றல்போல், அச் சிவசம்பந்த சைவசமயமே, மற்றைச் சமயங்களெல்லாவற்றுள்ளும் மேன்மையுற்று, மேற்கூறிய சாஸ்திரங்களால் விளக்கப்பெற்று, மற்றைச் சமயநூல்களொன்றானும் பாதிக்கப்பெறாமலும் அச்சமயங்கள் மற்றையமதங்களை ஒதுக்குதல்போல ஒன்றையும் ஒதுக்காமலும் அச் சமயங்களை யெல்லாந் தனக்குச் சோபானங்களாகத் தழுவிக் கொண்டு, யாதொரு முட்டுப்பாடுமின்றி உத்தமோத்தமமாகி விளங்குவது. இதனை

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம, வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ் சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்." என்னும் பிரபல சுருதியாற்காண்க.

இதன் பொருள், சீவர்கள் பிறந்திறவாப் பெருவாழ்வாகிய மீண்டுவாராப் பேரின்பமுற்று வாழ வேண்டுமானால், லோகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம், என்னும் புறப்புறச் சமயங்களாறையுங்கடந்து, தார்க்கிகம், மீமாஞ்சை, நானேபிரமமெனக் கொள்ளும் ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரமென்னும் புறச்சமயங்கள் ஆறிலும், அங்கங்குள்ள விதிப்படி நின்று மேன்மேன் மதங்களை யிகழாமல் ஒழுகி, அப்புண்ணிய பலத்தாற், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவமென்னும் அகப்புறச்சமயங்களாறினும், பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்த வாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவமென்

னும் அகச்சமயங்கள் ஆறினும் புகுந்துநின்று ஒழுகியும், ஸ்மிருதிக ளாகிய தருமசாஸ்திரங்களின் வழிகளில், வேதவிருத்தமில்லாத நெறிபற்றியொழுகியும், பிரமசரிய முதலிய நான்கு ஆச்சிரமங்க ளின் விதிவழியொழுகியும், அரியதவங்கள் செய்தும், அரிய கலை ஞானங்கள் பல தெரிந்தும், நான்கு வேதங்களையும் ஆராய்ந்தறிந் தும், அவற்றின் பொருள்நிச்சயந் தெரிவித்தலாற் சிறப்புடையபுரா ணங்களுணர்ந்தும், அவையெல்லாந் தெளிவாகும்படி வேதாந்தப் பொருளைப் பலமுறையழுந்த நோக்கியாராய்ந்து முன்பின் விரோ தம்வாராமற் சமன்வயஞ் செய்தறிந்தும், இவ்வரிசையில் வழுவாது சென்றாற், சித்தாந்த சைவ மார்க்கத்தி லணுகப் பெறுவார்கள். இதிற் சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் சிவஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்களென்பதாம். வேதாந்தம், வேதசிரசு உபநிடதம் எனப் பல பெயருள்ளது. அவ்வுபநிடதங்கள் பற்பல வுள்ளன. அவற்றுள்ளே சிலவுபநிடதங்கள் நாம்பிரமமென்னும் ஏகான்மவாதிகள் முதலியர் தங்கள் கொள்கைக்குத் தக்கபடி பொருள்கொண்டு மகிழ்தற்கு இடந்தந்து நிற்றலால், அவ்வேதாந் தங்களைப் பலமுறை ஆராய்ந்தாற்றான் முன்பின் விரோதமில்லாமல் உண்மை தெளிவாகுமென்பது தோன்றவே, மற்றவைகளுக்குப் போல வேத சிரப்பொருளைத் தெளிந்து மென்றுவாளாகூறுது, "மிகத்தெளிந்தும்" என்று அப்பிரபல சுருதி கூறிற்று. இவ்வுண் மை யுற்றுநோக்கியே தாயுமானவரும், "சைவசமயமேசமயம்" என்றருளினார். ஆனல் மற்றவைகள் சமயங்களன்றோ வெனின், அவையெல்லாம் அச்சைவசமயத்திற் புகுதற்குரிய சாதகங்களாகிய சௌபானங்கள் (படிவரிசைகள்) என்பதே அவர் கருத்தென்க. அதனையுமவரே "இயல்பென்றுந்திரியாம லியம மாதி யெண்குண முங் காட்டியன்பா லின்ப மாகிப், பயனருளப் பொருள்கள்பரிவார மாகிப் பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி, மயலறுமந் திரஞ் சிக்ஷை சோதி டாதி மற்றங்க நூல்வணங்க மௌன மோலி, யயர் வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தி லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ" என்று விளக்கியருளினார்.

இன்னோரன்ன பற்பல அற்புத மகிமைவாய்ந்த சுத்தாத்துவித சித்தாந்த சைவர்கள், அநாதிசைவனாகிய பரமசிவனையே தமக்குப் பதியாகக்கொண்டு அப்பெயரையே வகிக்கப்பெற்ற, ஆதிசைவர், மகா சைவர், அனுசைவர், அவாந்தர சைவர், பிரவர சைவர் அந்

திய சைவரென ஆறுவகையினரென்க. இவருள்ளே, ஆதிசைவரென்பவர்கள், சதாசிவமூர்த்தியினது ஐந்து திருமுகங்களினின்றுந் தோன்றி, அச்சதாசிவனாலேயே தீக்ஷிக்கப்பெற்ற கௌசிகர், காசியபர், பாரத்துவாசர், அத்திரி, கௌதமரென்கின்ற பஞ்சரிஷி கோத்திரத்தில் உற்பவித்தவர்கள். இவர்கள் சிவன் முகத்தில் வந்தவர்களாதலால், சிவப்பிராமணர்களென்னும் பெயர் உரிமையாற் பெற்றனர். மற்றைப் பிராமணர்கள் தம்ஜாதிப் பெயர் முதலில் சிவஎன்னும் விசேஷணம் வகிக்கப்பெறார்கள். தம்ஜாதிப் பெயர் முதலில் சிவசப்தம் வகிக்கப்பெற்ற இத்தகைய சிவப்பிராமணர்களே, சமயவிசேஷ நிருவாண சிவதீக்ஷை ஆசாரியாபிஷேகம் முதலிய சிவசமஸ்காரங்களைத் தம் கீழுள்ள பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராதியர்களுக்குச் செய்துவைத்தற்குரிய அதிகாரத்தைச் சிவாஞ்ஞையாற் பெற்றவர்கள். இவர்களே, பரார்த்தமாகிய சிவாலயாதிகளில் நித்திய நைமித்திக காமியாதி பூஜைகளும்; கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தங்களும் உள்ளபடி சிவாகம விதிகளை அறிந்து செய்தற்குரிய அதிகாரிகள். இவரையொழிந்த மற்றைப் பிராமணர் முதலியோர் ஆத்மார்த்த பூஜையே சிவாகம விதிப்படி அச்சிவப் பிராமணர்களிடத்துச் சிவதீக்ஷை பெற்றுச் செய்யத்தக்கவர்கள். இவர்கள் பரார்த்த பூஜை செய்யப்படாது. மோகலோப முதலிய எந்தக் காரணத்தினாலாவது பரார்த்தபூஜை செய்வராயின், அரசனுக்கும் தேசத்துக்கும் மற்றையோர்க்கும் பெருங்கேடு விளையும். இனி மகா சைவராவார் மேற்கூறிய சிவப்பிராமணர்களிடத்திலே சிவதீக்ஷைபெற்ற பிராமணர்களே. இவர்கள் சதாசிவர், மகேசுரர், ருத்திரர், விஷ்ணு என்னும் நால்வருக்கும் கீழுள்ள பிரமதேவர் முகத்தில் தோன்றினவர்களாதலாற், சதாசிவ முகத்திற்றோன்றிய சிவப்பிராமணர்களினின்றும் நான்குபடி கீழுள்ளவர்களாகின்றார்கள். இனி அனுசைவராவார், சிவதீக்ஷைபெற்ற க்ஷத்திரிய வைசியர்களே. அவாந்தர சைவராவார் சிவதீக்ஷைபெற்ற சூத்திரர்களே. பிரவரசைவராவார் சிவதீக்ஷைபெற்ற அனுலோமர்களே. மற்றையோர் அந்தியசைவர். இவ்வுண்மைகளை.

"கௌசிகக்காசியபச்சைவ பாரத்வாஜோத்திரிரேவச,
கௌதமச்சேதிபஞ்சைதே பஞ்சவக்திரேஷு தீக்ஷிதாஃ
கர்ஷணாதிபிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி யுற்சவாந்தகம்,

உற்சவாதிபிராயச்சித்தம் ஞாத்வாசர்வம்சமாசரேத்.
அந்நியேஷாம்சுவார்த்தயஜனம் நகுர்யாதுபரார்த்தகம்,
மோஹால் லோபாச்சகுர்வீத ராக்ஞோராஷ்டிரஸ்யதுஸ்திதி:"

என்னும் வாதுளாகம வசனத்தாலும்

"அரியசதாசிவனென்போ னநுதிசைவ னவன்பா லவதரித்தசிவ மறையோ ராதிசைவ ரிவர்பால், உரியசிவ தீக்கைபெற்றபூசுரர் மாசைவ ருயர்ந்தவரசன்வணிக னநுசைவ ராவார், பெரியகுவ ளைப்புயத்தோ னவாந்தரசைவன் சீர்பெறுசவன் னநுதியனுலோமர் பிரவரராம், விரியவனி மிசையொழிந்தோ ரந்தியசை வத்தோர் விரித்திடுமேழ் சைவவிதமிவையென நூல்விளம்பும்."

என்ற ஆசௌச தீபிகையாலும் மற்றும் பற்பல பிரபலப் பிரமாணங்களாலும் நன்கு தெளியலாம்.

இக் காலத்திலே, உண்மை யறிவும் திண்மை ஒழுக்கமும் வாய்ந்த பிராமணர் பலரொழிய, அவையில்லாதசில பிராமணர்கள் சிவாகமங்களையும் செந்தமிழ் வசனங்களையும் லாகவமாக்கி ஒதுக்கு கின்றார்கள். அது, அவர்களை மேலு மேலும் அதிபாதகராக்கி மீளாநரகத்துக்கு ஆளாக்குஞ் செயலன்றி வேறில்லை. ஒதுக்கும் அவர்களுக்கும் முக்கியப் பிரமாணமாகிய வேதபுராணேதிகாசாதி களும், சிவாகமங்கள் செந்தமிழ் வசனங்களை விசேஷித்துக் கூறு கின்றனவேயாம். அவற்றுளொன்றாகிய கந்தபுராண சங்கரசங்கி தையிலுள்ள ஆலாஸியமகாத்மியத்தில் வேதார்த்த நிர்ணயம் புக லும் அத்தியாயத்தில் தெக்ஷிணாமூர்த்தியே கண்ணுவாதி மகரிஷி களுக்குச் சதாசிவமூர்த்தியின் ஐந்து முகங்களில் உயர்ந்த ஈசான முகத்திலே, சிவாகமங்கள் (28ம்) அதன் கீழுள்ள தத்புருஷ அகோர வாமதேவசத்தியோஜாத முகங்கள் நான்கிலும் நான்குவேதங்களும் தோன்றின என்றுகூறியருளினர். இதனாலும், வேதங்களினின்றும் சிவாகமங்களுக்கு விசிட்டமே விளக்கமாகி, வேதங்களை மாத்திர மேற்கொண்ட வைதிகப் பிராமணர்களைக் காட்டிலும், அவ்வேதங் களையும் அவற்றின் சாரமாகிய விசிஷ்டமுள்ள சிவாகமங்களையும் மேற்கொண்ட வைதிக சைவர்களாகிய ஆதிசைவரென்னுஞ் சிவப் பிராமணர்கள் மிகமேலானவர்களென்பது தெளிவாயது.

(இன்னும் வரும்.)

சோமவாரவிரத மகிமை.

பிரமோத்தரகாண்டம்-சீமந்தனி சரித்திரம்.

முன்னொருகாலத்தில் கல்வியறிவொழுக்கங்களிலும், ஈசுரபக்தியிலும் சிறந்தவனும், குடிகளை மெய்யன்போடு ஆதரிப்பவனுமாகிய சித்திரவருமனென்பவன் ஆரியவர்த்தநாட்டை அரசாண்டு வந்தான். அவன் தனக்குச் சில ஆண்பிள்ளைகளிருந்தும் பெண் மகப்பேறில்லாமல் வருந்தி அனேக நற்றவங்கள் செய்து சிவபெருமான் திருவருளினாலே இலக்குமியை யொத்த அழகுடைய ஓர் புத்திரியைப் பெற்றான். அவ்வாறு தான் பெற்ற புத்திரிக்கு அவ்வரசன் சீமந்தனி யென்று பெயரிட்டு, அவள் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வரும் பொலிவைக்கண்டு உமாதேவியைப் புத்திரியாகப் பெற்ற பர்வதராசனைப் போலவும், மலயத்துவச பாண்டியனைப்போலவும் மகிழ்ச்சியடைவானாயினான். இங்ஙனம் நிகழுநாளில் அவ்வரசன் தன்னருமைப் புதல்விக்குச் சாதக மெழுதக் கருதி ஏவலாளர்களை யழைத்துத் தன்னுடைய இராஜ்யத்தில் சோதிட சாஸ்திரத்தில் நிபுணராயுள்ளவர்களை யழைத்துவரக் கட்டளையிட்டான். அவர்கள் உடனே சென்று தங்கள் அரசனது கட்டளையைச் சோதிடர்களுக்கு அறிவித்து அவர்களை விரைவில் அழைத்துவந்து அரசன் சமுகத்தில் விட்டார்கள். அவன் அவர்களைப்பார்த்து "சோதிடர்களே, என்னருமைப் புத்திரிக்கு நடக்கப்போகும் திசாபலன்களை சோதிட சாத்திரத்தால் ஆராய்ந்தறிந்து நிச்சயமான சாதகத்தைக் கணிப்பீராக," என்று கட்டளையிட்டான். அவ்வுத்திரவுபெற்ற சோதிடர்களுள் ஒருவன் அப்பெண்ணின் சன்ன லக்கினத்தை இலக்காகக் கொண்டு அவள் பூர்வ சன்மங்களிற் செய்த இருவினைக் கீடாக அனுபவிக்கப்போகும் இன்பதுன்பங்களை ஆராய்ந்து அரசனை நோக்கி "மகாராசனே, உம்முடைய புத்திரி அழகில் இலக்குமியை ஒத்தவள்; பதிவிரதா தருமத்தில் சீதையையொத்தவள்; நீண்டகாலம் சுமங்கிலியாய் கணவனைவிட்டுப் பிரியாமல் புத்திரப்பேறு முதலிய சகலஐஸ்வரியமும்பெற்று வாழ்வாள்" என்றான். இவற்றையெல்லாங் கேட்டு அரசன் மகிழ்வுற்றிருக்கும்போது மற்றொரு சோதிடன் அவள் சாதகத்தின்படி அவளது பதினாலாவது வயதில் அவள் புருஷனுக்கு ஓர் சலக்கண்டம் இருப்பது கண்டு, பின்னும் அவளுக்கு நடக்கப்

போகும் திசாபலன்களை ஆராய்ந்தறியாமல், அரசனை நோக்கி "இந்தச்சாதகியின் பதினாலாவது வயதில் இவள் புருஷன் சலத்தில் மூழ்கி யிறப்பான்" என்றான். அதைக்கேட்டு அரசன் பெருமூச்சு விட்டு இடிமுழக்கங் கேட்ட சர்ப்பத்தைப்போல் நடுங்கி சிங்காசனத்தினின்றுங் கீழேவிழுந்து அவசமாயினான். பின்பு அமைச்சர் முதலியோரால் சயித்தியோபசாரஞ் செய்யப்பட்டு எழுந்து "வகுத்தான் வகுத்தவகை யல்லாற் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது" என்னும் ஆன்றோர்வாக்கைச் சிந்தித்து ஒருவாறு தேறியிருந்தான்.

பிறகு சிலநாள் பொறுத்து சீமந்தனி தக்க பருவமடைந்தவளாய் தன் தோழியரோடு சல்லாபித்துக்கொண் டிருக்கையில் அவர்களுள் ஒருத்தி அவளைப்பார்த்து "என் அருமைத் தோழியே, நீ பதினாலாம் வயதில் கணவனை யிழப்பாயென்று உன் சாதகங்கணித்த சோதிடன் உன் தகப்பனாரிடம் சொன்னான்" என்றாள். அதைக் கேட்டுச் சீமந்தனி வருந்தி விதியை மதியால் வெல்லக் கருதி, யர்க்கியவர்க்க முனிவர் பத்தினியாகிய மயித்திரை யென்பாளிருக்கும் பன்னசாலைக்குப் போய் அவளைத்தொழுது தனக்கு உறப்புகும் குறையைச்சொல்லி அதனைத் தப்புவதற்குவேண்டிய உபாயம் அருளும்படி வேண்டினாள். அதைக்கேட்டு மயித்திரை "பெண்ணே, விரதங்கள் யாவற்றுள்ளும் சிறந்தது சோமவார விரதமாகும். இவ் விரதம் கார்த்திகை மாதத்து முதற்சோமவாரந் தொடங்கி சோமவாரந்தோறும் சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கற்பாலது. இவ்விரதத்தை யநுட்டிக்கும் ஸ்திரீகளெல்லாம் இம்மையில் தீர்க்காயுளைப்பெற்று தீர்க்கசுமங்கிலியாய் சகலபோகத்தையு மநுபவித்து மறுமையில் சிவபெருமான் திருவடி நீழலையடைவார்கள். நீயும் இவ்விரதத்தை அதிசிரத்தையுடன் அநுட்டித்தால் உனக்கு உறப்புகும் தீமையினின்று நீங்குவாய்" என்றாள். அதைக்கேட்டுச் சீமந்தனி மகிழ்வுற்று அம்முனி பத்தினியினிடம் உத்திரவுபெற்று தன்னிருப்பிடம் வந்து அவ்வாறே சோமவாரந் தோறும் சிவபெருமானைப் புனிதநீரால் திருமஞ்சனமாட்டி பஞ்சாக்ஷரசெபம், வேத பாராயணம் முதலியவற்றால் சந்தோஷிப்பித்து தன்குறையை நீக்குமாறு வேண்டுவாளாயினாள்.

இங்ஙனம் நிகழுநாளில் நிடததேசத் தரசனாகிய புகழ்பெற்ற நளச்சக்ரவர்த்தியின் புத்திரன் இந்திரசேனன் என்பான் சீமந்தனி

யின் ரூபலாவண்ணியத்தையும் புத்திமேன்மையையுங் கேட்டு அவளைத் தன் தனயனாகிய சந்திராங்கதனுக்கு மணஞ்செய்து கொடுக்குமாறு ஆரியவர்த்தநாட்டரசனாகிய சித்திரவருமனை வேண்டலும் அவனும் அதற்கு நேர்ந்தான். உடனே சீமந்தனிக்கும் சந்திராங்கதனுக்கும் சர்வாடம்பரமாய் விவாகம் நடந்தது. பின்பு சின்னாட்பொறுத்து சந்திராங்கதன் தன் தோழர்களுடன் யமுனையாற்றில் வேடிக்கையாக ஓடஞ்செலுத்தி விளையாடுகையில் விதிவசத்தால் ஓர் பெரிய அலை அடிக்க ஓடம் கவிழ்ந்தது. ஓடம் கவிழ்ந்த மாத்திரத்தில் சந்திராங்கதன் ஒருவன் தவிர மற்றவர்களெல்லாம் முதலைவாயிலகப்பட்டு உயிர்துறந்தனர். சந்திராங்கதன் மாத்திரம் தான் பூர்வசன்மத்தில் செய்த புண்ணிய வசத்தினாலும், தன்மனைவி நோற்கும் சோமவார விரதபலனாலும் நாகலோகத்திலுள்ள ஓர் நதிக்கரையையடைந்தான். அந்நதியில் விளையாடிக்கொண்டிருந்த நாககன்னியர்கள் அவனைப்பார்த்து அருகிற்சென்று அவன் வரலாற்றை முற்றிலுமறிந்து தங்களரசன் அரண்மனைக்கு அவனை அழைத்துப்போய் அவ்வரண்மனைவாயிலில் நிறுத்தி, தாங்கள் உட்சென்று தங்களரசனிடம் அச்செய்தியை யறிவித்து, அவன் அநுமதிபெற்று உள்ளே அழைத்துச் சென்றார்கள். அவ்வாறு நாககன்னியர்களால் அழைத்துச் செல்லப்பட்ட சந்திராங்கதன் நாகராசனான தக்ஷகனைக் கண்டு வணங்கிநின்றான். தக்ஷகன் அவனைப்பார்த்து "நீயார்? உன்பெயரென்ன? உன்குலம், தேயம், தகப்பன் பெயர் முதலியவற்றை எனக்கு நன்கு விளக்குவாய்" என்றான். அதற்குச் சந்திராங்கதன் "நான் நிடததேசத் தரசனாகிய இந்திரசேனனுடைய புதல்வன். என் பாட்டன் கற்பிற்சிறந்தவளென்று உலகத்தாரால் புகழப்படும் தமயந்தியைத் தனக்குமனைவியாகப்பெற்ற நளச்சக்கிரவர்த்தி யென்பவன். என்பெயர் சந்திராங்கதன். ஆரியவர்த்த நாட்டரசனாகிய சித்திரவருமனுடைய புத்திரி சீமந்தனி யென்பாள் என்மனைவி. நான் என் சினேகிதரோடு யமுனையாற்றில் வேடிக்கையாக ஓடம் செலுத்துகையில் ஓர் பெரிய அலையால் அவ்வோடங் கவிழ்ந்தது. என் சினேகிதரெல்லாம் முதலையால் விழுங்கப்பட்டனர். நான் தங்களைக்காணும் நல்லூழ்வினையால் உயிர்பிழைத்தேன்" என்றான். அவற்றை யெல்லாங் கேட்டு தக்ஷகன் பின்னும் "நீ வணங்குங் கடவுள் யார்" என்று வினவ, சந்திராங்கதன் "நான்

வணங்குங் கடவுள் தேவதேவராய், அரிபிரமராதியராலும் அறியப் படாதவராய், அட்டமூர்த்தியாய், பிரமன், திருமால், உருத்திர ராகிய மூவரும் தனது கட்டளையால் சிருட்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழிலை நடத்த அவர்களை அதிட்டித்து நிற்பவராய், தமக்கென ஓர் நாமம், ஓர் உருவம் ஒன்றும் வேண்டிலாராயினும் ஆன் மாக்களின்மீது கொண்ட காருண்ணியத்தால் அவர்கள் பிறவித் துன்பத்தினின்று நீங்க, திரிநேத்திரம், சதுர்புஜம், காளகண்டம் பெண்ணொருபாகம் ஆகிய சகளத்திருமேனி கொண்டு சிற்றம்பலத் தே உமாதேவியார் கண்டு களிக்க பஞ்சகிருத்தியத் திருநடனம்புரி யும் சிவபெருமான்'' என்றான். இவற்றையெல்லாங் கேட்டு நாகரா சன் மகிழ்ந்து "இராசகுமாரனே, உன்னால் கூறப்பட்ட சிவபெரு மானின் அநந்த கல்யாணகுணங்களைக் கேட்டு மகிழ்ந்தேன். நீ இவ் வுலகத்திலேயேயிருந்து இங்கிருக்குஞ் சுகங்களை யனுபவிப்பாயாக. இவ்வுலகத்திலெங்கும் பிரகாசிக்கின்ற மாணிக்கங்களுள்ளன. நாக கன்னியர்கள் அரம்பாஸ்திரீகளையொத்த அழகுள்ளவர்கள். இங்கு வசிப்பவர்களை நரை திரை மூப்புப் பொருந்துவதில்லை. யமதூதர்க ளிவ்விடத்திற்கு வாரார்கள்'' என்றான். அதற்குச் சந்திராங்கதன் "நாகராசனே, விருத்தாப்பிய திசையை யடைந்திருக்கும் என்பிதா மாதாக்களுக்கு யான் ஒரே புதல்வன். அன்றியும் என் மனைவி சிறிய வயதையுடையவள். நான் ஆற்றில் இறந்தேன் என்று அவர்களனை வரும் மிகவும் வருத்தப்பட்டுக்கொண் டிருப்பார்கள். ஆதலால் தயைசெய்து என்னை என் இருப்பிடத்திற்குத் துணைகூட்டி யனுப்ப வேண்டும்'' என்றான். சந்திராங்கதன் அவ்வாறு வேண்டலும் நாகராசன் அவனுக்குப் பொன் மாணிக்கம் முதலியவற்றை வெகுமதிய பக்கொடுத்துத் தன் புதல்வனை யழைத்து அவனைப் பத்திரமாய் அவன் இருப்பிடங்கொண்டுபோகச் சொன்னான். நாகநாட்டரசன் புதல்வன் உடன்வரச் சந்திராங்கதன் யமுனையாற்றங்கரையைச் சேர்ந்தான்.

இது இவ்வாறாக, சீமந்தனியின் தகப்பன் சித்திரவருமன் தன் மருமகன் ஆற்றில் மூழ்கினதைக் கேள்விப்பட்டு நதிக்கரையில் வந்து பார்த்து வருந்தி அச்செய்தியை தன் புதல்விக்குத் தெரிவித் தான். அவளதைக்கேட்டவுடனே கீழ்விழுந்து புரண்டு "என் பிரிய முள்ள நாயகரே, என் இருகண்மணியே, உம்மை நிழலைப்போல் எப்பொழுதும் விட்டுப்பிரியாது என்னை எவ்வாறு பிரியத்துணிக

தீர், என்னிடத்தில் கூடிச் சுகிக்கும் இவ்வுலக வின்பத்தைவெறுத்துத் தேவமாதரின் சுகத்தையநுபவிக்கச் சென்றீரோ. அல்லது நாகலோகத்திலுள்ள நாககன்னியரை மணந்தின்புற்றிருக்கச் சென்றீரோ. நான் மறுபடியும் தங்களிடம் வார்த்தையாடுவது எக்காலம். ஆ, என்நாயகரே நமக்கு விவாகம் நடந்தபோது அக்கினிதேவன், தேவப்பிராமணர்கள் சாட்சியாக உன்னைவிட்டு எக்காலமும் பிரியேன் என்று எனக்குச் சொல்லிய வாக்கை மறந்தீரோ, மறந்தீரோ. சிறிய பட்சிகளுங்கூட ஆணும் பெண்ணுமாய்ச் சிறிதுநேரமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் இருக்கின்றனவே, நான் தங்கள் பிரிவை எவ்வாறு சகிப்பேன். இனி நான் உயிர்வாழ்தலைவிட சாதலே நன்று'' என்று சொல்லிக்கொண்டே நெருப்பில்வீழ்ந் திறக்கக்கருதி அக்கினிகுண்டத்தில் பிரவேசிக்கச் சென்றாள். அதைக்கண்ட அவள் தகப்பன் அவளிடஞ்சென்று அவள் மனத்துயரைத்தேற்றி அவளை நெருப்பில் விழாவண்ணம் தடுத்தான். பிறகு சீமந்தனி கைம்பெண்ணிருக்கவேண்டும் நெறியில் சிறிதும் பிறழாமலும் சோமவார விரதத்தை விடாமல் அநுட்டித்தும் வந்தாள்.

இந்திரசேன மகாராஜனும் தன் மகன் ஆற்றில் மூழ்கினதைக் கேள்விப்பட்டு வருந்தினான். இச்செய்தி யாவற்றையும் கேள்விப்பட்ட இந்திரசேனனுடைய பகைவர் இது தான் தக்க சமயமென்று அவனை அவன் மனைவியுடன் சிறைப்படுத்தி அவன் இராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அவ்வாறு சிலநாட் கழிந்தது. பின்பு ஓர் நாள் சீமந்தனி வழக்கப்படி யமுனையாற்றில் ஸ்நாநஞ்செய்துகொண்டிருக்கையில் நாகநாட்டரசன் குமாரனைத் துணைக்கொண்டு வரும் சந்திராங்கதனைக் கண்டாள். உடனே அவள் மனம் அவன்பாற் சென்றது. சந்திராங்கதனு மவளைக்கண்டு தன்மனைவியென்றறிந்து அவள் இருக்குங் கோலங்கண்டு வருந்தி அவள் வரலாற்றை வினவினான். அதைக்கேட்டு சீமந்தனி நாணிநிற்க அவளருகிலிருந்த தோழிமார் அவள் இன்னாள் என்பதையும், அவள் விதவையான காரணத்தையும், அவள் மாமன் இராஜ்யத்தைப் பகைவர் கைப்பற்றிக்கொண்டதையும் அவனுக்கு முற்றிலும் விளக்கினார்கள். அதைக்கேட்டுச் சந்திராங்கதன் சீமந்தனியைப் பார்த்து பெண்மணீ, உன் புருஷன் சிநேகிதன் யான். அவன் இன்னும் உயிரோடிருக்கிறான்; இரண்டுநாளில் இங்கு வருவானென்று சொல்லித் தன் தகப்பனைக் காண விடைபெற்றுச் சென்றான். விடைபெற்றுத்தன்

கில் சென்று தன் தகப்பன் இராஜ்யத்தைக் கைப்பற்றிய அரசனை அதைவிட்டுப் போகும்படியாகவும், அவனைச் சிறைவிடும்படியாகவும் சொல்லும்படி தன்னுடன் வந்த நாகராசன் குமாரனைத் தூதனுப்பினான். பகைவனும் அதைக்கேட்டுப் பயந்து அந்நாட்டைவிட்டுப் போய்விட்டான். பின்பு சந்திராங்கதன் தன் தகப்பனைச் சிறைவிடுத்து அவன் பாதங்களில் வணங்கி நின்றான். தன் புதல்வனைக் கண்டு இந்திரசேனன் மகிழ்ந்து அவன் ஆற்றில் வீழ்ந்தபின் நடந்தசெய்தி யாவற்றையும் கேட்டு தன் சம்பந்தியான சித்திரவருமனுக்குத் தன்மகன் வரவைத் தெரிவித்தான். அதைக்கேட்டு அவனுமகிழ்ந்து சீமந்தனியை ஆடையாபரணங்களாலலங்கரித்து நிடதேசம் அழைத்துச் சென்றான். பின் சீமந்தனிக்கும் சந்திராங்கதனுக்கும் மறுமணம் நடந்தது. பிறகு சிலகாலம் அவர்களிருவரும் கூடிக்களித்து தருமநெறி பிறழாமல் இல்லறம் நடாத்தியும், சோமவாரந்தோறும் பிராமணர்களை அவர்கள் பத்தினிமாரோடு பார்வதியும் பரமசிவமுமாகப் பாவித்துப் பூசித்து அவர்களுக்கு வேண்டியவற்றை கொடுத்தும் வாழ்வாராயினர்.

இவர்கள் இவ்வாறு வாழுநாளில், வைதர்ப்பநாட்டிலே வாழும் வேதமித்திரன் என்னும் பிராமணனும் சார்ச்சுதன் என்னும் பிராமணனும், முறையே தங்கள் புத்திரராகிய சுமேதா சாமவான் என்பவரின் கல்வித்திறத்திற்கு மெச்சி, அவர்களை அந்நாட்டரசனிடம் அவர்கள் விவாகத்திற்கு பொருள் சம்பாதிக்குமாறு செலுத்தினர். அவர்களு மவ்வாறே சென்று தங்கள் கல்வித்திறத்தைக் காட்டி அரசன் புகழப் பிரசங்கித்தனர். பிறகு அரசன் அவர்களைப் பார்த்து "பிள்ளைகளே, உங்கள் கல்வித்திறத்திற்குச் சந்தோஷித்தேன். நீங்கள் யாது கருதி என்சபைக்கு வந்தீர்கள்?" என்றான். அதற்கு அந்த பிராமணப்பிள்ளைகள் "மகாராசனே, நாங்கள் விவாகஞ் செய்துகொள்ளக் கருதியுள்ளோமாதலால் அதற்கு வேண்டிய பொருளைத் தருமாறு உம்மிடம் யாசிக்கவந்தோம்" என்றார்கள். அம்மொழியைக் கேட்டு அரசன் "நல்லது, சந்தோஷம். நீங்கள் என்வாக்கின்படி நடந்தால் உங்களுக்கு மிகுந்த திரவியங்கிடைக்கும். நிடதேசத்தரசன் மனைவி சோமவாரந்தோறும் தங்கள் புத்தினிமாருடன் தன் இருப்பிடம் வரும் பிராமணர்களைப் பூசித்து அவர்களுக்கு வேண்டிய திரவியமும் கொடுத்தனுப்புகிறாள். நீங்கள் உங்களில் ஒருவனுக்குப் பெண்வேடந்தரித்து பிராமணத் தம்பதி

கனைப்போல் அவளிடஞ் சென்றால் மிகுந்த திரவியம் பெறலாம்'' என்றான். இவ்வாறு அரசன்சொன்ன மொழிகேட்டு அந்த பிராமணப் பிள்ளைகள் அஞ்சி "மகாராசனே, உம்மிடம் விவாகத்திற்குப் பொருள் யாசிக்கவந்த எங்களை சிவாபராதத்துக்கு உட்படுத்தல் முறையோ? அவ்வாறு பொருள் சம்பாதித்து விவாகஞ் செய்துகொள்வதிலும் என்றும் பிரமசாரியாகவே இருந்துவிடுதல் நன்று. இனி யெங்களுக்கு வீட்டிற்குப்போக விடைகொடும்'' என்றார்கள். அதைக்கேட்ட அரசன் கோபித்தவனாய் வெடிபட முழங்குஞ் சொல்லால் "என் கட்டளையை மறுப்பீராகில் உங்களை இப்பொழுதே பிராமணரென்கிற யோக்கியதை யில்லாமல் நான்கு வருணத்துக்கும் தாழ்ந்த சாதியாய்ப் போகத்தக்க கொடிய தண்டனை செய்வேன்'' என்றான். அதைக் கேட்டு அந்த பிராமணப்பிள்ளைகள் அஞ்சி தங்களுள் ஒருவனை சாமவானென்பவனுக்குப் பெண்வேடம் தரித்து இருவரும் பிராமணத் தம்பதிகளைப்போல் நிடததேசம் சென்று சீமந்தனியின் அரண்மனையில் புகுந்து அங்கிருக்கும் பிராமணக் கூட்டத்துடன் இருந்தனர். பிறகு சீமந்தனி வழக்கம்போல் பிராமண பூசைசெய்து கொண்டுவருகையில் இவர்களைப் பார்த்து பொய்வேடம் பூண்டவரென்றறிந்து சற்று நாணி பிறகு யாவராயினும் சோமவார தினத்தில் ஸ்திரீ புருஷராக வருபவர்களைப் பார்வதி பரமசிவனாகப் பாவித்துப் பூசித்தல் நமது கடமையாகும் என்று தனக்குள்ளே சிந்தித்து அவர்களையும் அவ்வாறே பாவித்துப் பூசித்து அவர்களுக்குவேண்டியவற்றை கொடுத்தனுப்பினாள். பெண்வேடந்தரித்த சாமவான் சீமந்தனியின் பாவனைப்பயன் மேவரப்பெற்று நிசமான பெண்ணுருவம் அடைந்தான். பிறகு அவ்விருவரும் தங்களிருப்பிடம் நோக்கிச்செல்லும் வழியில் பெண்ணுருவமடைந்தவன் தன்னுடன் வரும் தன் தோழனை சுமேதா என்பவனை அவ்வழியில்தானே தன்னை ஆலிங்கனஞ் செய்யுமாறு வேண்டினான். அதைக்கண்டு சுமேதா தோழன் தன்னுடன் விளையாடுகிறான் என்று நினைத்துப் பிறகு உண்மையை உணர்ந்து "இச்சங்கதியை நமது பெற்றோர்க்கு அறிவித்துப்பிறகு நான் உன்னை கலியாணம் செய்துகொள்ளுகிறேன்'' என்று

சொல்லி தம் ஊரை நோக்கிச் சென்றான். அவ்வாறு அவர்களிருவரும் தம் இருப்பிடஞ் சென்று தங்கள் பெற்றோர்க்குத் தாங்கள் அரசனிடம் சென்றது முதல் நடந்தசெய்தி யாவற்றையும் விளம்பலும், பெண்ணுருவடைந்தவனின் தகப்பன் அவர்களை அப்பழிக்கு ஆளாக்கிய அரசனிடஞ் சென்று கோபத்துடன் "அரசனே, உன்னிடம் யாசிக்கவந்தவருக்குப் பொருள்கொடுக்க உனக்குச் சம்மதமில்லாவிட்டால், பொருள் கொடேன் என்றுசொல்லி அவர்களையனுப்பாது இவ்வாறு வஞ்சித்தல் நியாயமோ? என்புத்திரனது மணக்கோலத்தைக்கண்டு களிக்கவிருந்த என் எண்ணத்தைக் கெடுத்து அவனைப் பெண்ணுருவாமாறு வஞ்சித்தனையே, பேதாய், உன் குல முழுவதும் நசிக்கக்கடவது" என்று சபித்து வருந்தினான்.

அதைக்கேட்டு அரசன் திடுக்கிட்டு பாரத்துவாசமுனிவரிடஞ் சென்று தனக்குற்ற அப்பழியினின்று நீங்குமார்க்க மருளும்படி வேண்டலும், முனிவர் அவனை நோக்கி "நீ உன் பழியினின்று நீங்க பார்வதி பூசைசெய்" என்று காயத்திரி மந்திரத்தை உபதேசித்தார். அரசனும் அவ்வாறே பூசை செய்யவும் பார்வதிதேவியார் பிரசன்னமாகி "அரசனே, உனக்கு வேண்டிய வரங்கேள்" என்றனர். அரசன் "அம்மையே, இப்பிராமணப்பிள்ளை யடைந்த பெண்ணுருவை மாற்றவேண்டும்" என்றான். தேவியார் அதற்கு "அரசனே, நீ எத்தனைநாள் தவஞ்செய்தாலும் எம் அன்பரின் மனோபாவனையை மாற்றமுடியாது. வேறுவரங்கேள்" எனலும், அரசன் அம்மையை வணங்கி "இப்பிராமணன் புத்திரசோக நீங்குமாறு இவனுக்கு மற்றொரு குமாரனை அருளவேண்டும்" என்றான். அதற்குத் தேவியார் "அப்படியே ஆகுக" என்றுசொல்லி மறைந்துவிட்டனர். பின்பு சுமேதாவுக்கும், பெண்ணுருவடைந்த சாமவான் என்பவனுக்குங் கலியாணம் நடந்தது. இவ்வாறு அநுட்டித்த சோமவாரவிரதபயனால் சீமந்தனியும், சந்திராங்கதனும் பின்பு அநேகநாட் கழித்து சிவபெருமான் திருவடிநீழலையடைந்தனர். சுபம்.

இருக்கம் - கண்ணப்ப முதலியார்.